www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

8 வகுப்பு

QL

# காலாண்டுத் தேர்வு - 2024
# தமிழ்

நேரம் : 2.30 மணி

மதிப்பெண் : 100

## பகுதி - I

I) சரியான விடையைத் தேர்வு செய்க 10 × 1 = 10

1. வளைந்த கோடுகளால் அமைந்த மிகப்பழைய தமிழ் எழுத்து ______ என அழைக்கப்படுகிறது.
அ) கோட்டெழுத்து ஆ) வட்டெழுத்து இ) சித்திர எழுத்து ஈ) ஓவிய எழுத்து
2. இதழ்களைக் குவிப்பதால் பிறக்கும் எழுத்துகள் _____.
அ) இ, ஈ ஆ) உ, ஊ இ) எ, ஏ ஈ) அ, ஆ
3. செஞ்சொல் மாதரின் வள்ளைப்பாட்டிற்கேற்ப முழவை மீட்டுவது ________.
அ) கடல் ஆ) ஓடை இ) குளம் ஈ) கிணறு
4. உடல்நலம் என்பது ______ இல்லாமல் வாழ்தல் ஆகும்.
அ. அணி ஆ. பணி இ. பிணி ஈ. மணி
5. 'இருதிணை' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது _________.
அ) இரண்டு + திணை ஆ) இரு + திணை
இ) இருவர் + திணை ஈ) இருந்து + திணை
6. தொடக்க காலத்தில் மனிதர்கள் மருத்துவத்திற்கு _____ பயன்படுத்தினர்.
அ) தாவரங்களை ஆ) விலங்குகளை இ) உலோகங்களை ஈ) மருந்துகளை
7. முற்றுப் பெறாமல் எஞ்சி நிற்கும் சொல் _____ எனப்படும்.
அ) முற்று ஆ) எச்சம் இ) முற்றெச்சம் ஈ) வினையெச்சம்
8. கற்றவருக்கு அழகு தருவது ________.
அ) தங்கம் ஆ) வெள்ளி இ) வைரம் ஈ) கல்வி
9. இடம் + எங்கும் என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் _____.
அ) இடவெங்கும் ஆ) இடம்எங்கும் இ) இடமெங்கும் ஈ) இடம்மெங்கும்
10. இன்றைய கல்வி _____ நுழைவதற்குக் கருவியாகக் கொள்ளப்பட்டு வருகிறது.
அ) வீட்டில் ஆ) நாட்டில் இ) பள்ளியில் ஈ) தொழிலில்

II) கோடிட்ட இடங்களை நிரப்புக 5 × 1 = 5

11. எழுத்துகளில் புள்ளிகளால் ஏற்படும் குழப்பங்களைக் களைந்தவர் ______.
12. வல்லின எழுத்துகள் பிறக்கும் இடம் ______.
13. புற உலக ஆராய்ச்சிக்கு _____ கொழுகொம்பு போன்றது.
14. காந்தியடிகள் _____ போற்ற வாழ்ந்தார்.
15. செவ்விந்தியர்கள் நிலத்தைத் _____ மதிக்கின்றனர்.

III) பொருத்துக. 5 × 1 = 5

16. நான்காம் வேற்றுமை - பாரியினது தேர்
17. ஆறாம் வேற்றுமை - கம்பராமாயணம்
18. இயற்கை ஓவியம் - இராமனுக்குத் தம்பி இலக்குவன்
19. இயற்கை பரிணாமம் - வாழ்க
20. வியங்கோள் வினைமுற்று - பத்துப்பாட்டு

## பகுதி - II

IV) அடிபிறழாமல் எழுதுக. 4 + 2 = 6

21. அ) "உடலின் உறுதி உடையவரே ____ எனத் தொடங்கி "பெறுவாயே!" என முடியும் பாடலை அடிமாறாமல் எழுதுக. (அல்லது)
ஆ) "ஓடை யாட" எனத் தொடங்கி "போராரோடி" என முடியும் ஓடை பாடலை அடிமாறாமல் எழுதுக
22. "விலங்கொடு" எனத் தொடங்கும் திருக்குறளை எழுதுக

## பகுதி - III

V) எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளிக்க 5 × 2 = 10

23. தமிழ் எங்குப் புகழ் கொண்டு வாழ்கிறது?
24. ஒலி எழுத்து நிலை என்றால் என்ன?
25. ஓடை எழுப்பும் ஒலிக்கு எதனை உவமையாக வாணிதாசன் குறிப்பிடுகிறார்?
26. நம்மை நோய் அணுகாமல் காப்பவை எவை?



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

27. நல்வாழ்விற்கு நாம் நாள்தோறும் செய்ய வேண்டியவை யாவை?
28. யாருக்கு அழகு செய்ய வேறு அணிகலன்கள் தேவையில்லை?
29. தாய்நாடு என்னும் பெயர் எவ்வாறு பிறக்கிறது?

VI எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும் 5 × 2 = 10

30. எழுத்துகளின் பிறப்பு என்றால் என்ன?
31. வியங்கோள் வினைமுற்று விகுதிகள் யாவை?
32. முற்றெச்சத்தைச் சான்றுடன் விளக்குக.
33. எழுவாய் வேற்றுமையை விளக்குக.
34. எச்சம் என்றால் என்ன? அதன் வகைகள் யாவை?
35. உடனிகழ்ச்சிப் பொருள் என்றால் என்ன?
36. தெரிநிலை வினைமுற்று எவற்றைக் காட்டும்?

VII) எவையேனும் ஆறு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க 6 × 3 = 18

37. தமிழ் எழுத்துகளில் ஏற்பட்ட உருவ மாற்றங்களை எழுதுக.
38. தமிழ்மொழியை வாழ்த்திப் பாரதியார் கூறும் கருத்துகளை எழுதுக.
39. புயல் காற்றினால் மரங்களுக்கு ஏற்பட்ட நிலைகளாகப் பாடல் குறிப்பிடும்கருத்துகள் யாவை?
40. நீர்நிலைகள் குறித்துச் சியாட்டல் கூறியுள்ளவற்றை எழுதுக.
41. நோயின் வகைகள், அவற்றைத் தீர்க்கும் வழிகள் பற்றி நீலகேசி கூறுவன யாவை?
42. பள்ளிக் குழந்தைகளுக்கு மருத்துவர் கூறும் அறிவுரைகள் யாவை?
43. புத்தியைத் தீட்டி வாழ வேண்டிய முறைகளாகக் கவிஞர் கூறுவன யாவை?
44. தமிழ்வழிக் கல்வி பற்றித் திரு. வி. க. கூறுவனவற்றை எழுதுக.

## பகுதி - IV

VIII) எவையேனும் ஆறு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்கவும் 6 × 2 = 12

45. *சரியான மரபுச் சொற்களைத் தேர்ந்தெடுத்து எழுதுக*

அ) பால் __________ (குடி / பருகு) ஆ) பூ ____________ (கொய் / பறி)

46. *சொற்களை ஒழுங்குப்படுத்தி முறையான தொடராக்குக*

அ) கழுத்து பிறக்கும் இடம் உயிரெழுத்து ஆகும்

ஆ) ஏகலை கலையை அம்புவிடும் தமிழ் என்றது

47. *கொடுக்கப்பட்டுள்ள தொடர்களின் வகையைக் கண்டறிந்து எழுதுக*

அ) கடமையைச் செய் __________

ஆ) நீ எத்தனை புத்தகங்களைப் படித்திருக்கிறாய்? _____

48. *கலைச்சொல் எழுதுக*

அ) Disease ஆ) Reform

49. *தமிழ் எண்களை எழுதுக*

அ) உலக ஓசோன் நாள் செப்டம்பர் 16 ---------

ஆ) உலக இயற்கைச் சீரழிவுத் தடுப்பு நாள் அக்டோபர் 5 ________

50. *பின்வரும் தொடர்களில் உள்ள இடங்களில் நிறுத்தற்குறிகளை இடுக*

அ) திருக்குறள் அறம் பொருள் இன்பம் என்னும் முப்பால் பகுப்புக் கொண்டது

ஆ) திரு.வி.க. எழுதிய பெண்ணின் பெருமை என்னும் நூல் புகழ் பெற்றது

51. *உவமைத் தொடர்களைப் பயன்படுத்தி தொடர் அமைக்க*

உடலும் உயிரும் போல

## பகுதி -V

IX) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க 3 × 8 = 24

52. அ) எழுத்துகளின் தோற்றம் குறித்து எழுதுக. (அல்லது)

ஆ) தமிழர் மருத்துவத்தின் சிறப்புகளாக மருத்துவர் கூறும் செய்திகளைத் தொகுத்தெழுதுக.

53. அ) திருக்குறளின் கருத்தைப் பின்பற்றி நடந்த சகாதேவன் கதையைச் சுருக்கி எழுதுக

(அல்லது) ஆ) "வெட்டுக்கிளியும் சருகுமானும்" - கதையைச் சுருக்கி எழுதுக

54. அ) கட்டுரை எழுதுக :- "நான் விரும்பும் கவிஞர்" (அல்லது)

*ஆ) கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகளைக் கொண்டு கட்டுரை எழுதுக*

முன்னுரை - நூலகத்தின் தேவை - வகைகள் - நூலகத்திலுள்ளவை - படிக்கும் முறை - முடிவுரை.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com